★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 8உ வெள்ளி (20—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 9உ சனி (21—4—56) [இதழ் 264

ஆந்திராவில் எண்ணெய் ஊற்று

பீமாவரம், ஏப். 19—

ஆந்திராவில் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் மண்ணெண்ணெய் ஊற்றுகள் இருக்கின்றனவா?

இங்கிருந்து 25 மைல் தொலைவில் உள்ள பட்டிபுரம் கிராமத்தில் கன்டிகோடு பாலம் கட்டும் வேலை சம்பந்தமாகக் கிணறுகள் வெட்டியபோது, மண்ணெண்ணெய் வாடை அடித்ததாயும் உடன் வேலை நிறுத்தப்பட்டதாயும் கூறப்படுகிறது.

அங்கு எண்ணெய் ஊற்றுகள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்திய சர்க்காரின் பூகர்ப்ப இலாகாவினர் பரிசோதனை மேற்கொள்ளக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

சுதந்திர நாகர் நாடு தோற்றம்

மார்ச் 20-ல் பிரகடனப்படுத்தப் பட்டதாம்

கைதான அதிகாரிகள் கண்ணியமாக நடத்தப்பட்டனர்

அதிகாரிகளை விடுவித்த அறமன்றத் தலைவர் உயர்தரக் கல்வி கற்ற நாகராம்!

கிளர்ச்சிக்கார நாகரிடம் சிக்கிய இந்திய அரசாங்க அதிகாரிகள் கூறும் தகவல்

ஷில்லாங், ஏப். 18—

வடகிழக்கு எல்லைப் பகுதியில் இந்திய அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்துவரும் நாகமலைஜாதியினர் ஒரு சுதந்திர நாகர் நாட்டைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். மார்ச் 20-ந்தேதியிலிருந்து அந்தச் சுதந்திர ஆட்சி செயல்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இத் தகவலை, அசாம் அரசாங்க மராமத்துத் துறையைச் சேர்ந்த இரு இடைநிலை அதிகாரிகள் கொடுத்துள்ளனர்.

அவ்வதிகாரிகள் இருவரும், வோகா என்ற சிற்றூருக்கு அருகிலிருந்து, கிளர்ச்சிக்கார நாகர்களால் மார்ச் 26-ல் தூக்கிச் செல்லப்பட்டனர். அவர்கள், நாகர் சுதந்திர அரசாங்கத்தினால் செயல்படுத்தப்பட்டுவரும் ஒரு அறமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் அல்லவெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

அவர்கள், இருவரும் சொந்த ஊர்களுக்குத் திரும்பவும் வசதி செய்துத் தரப்பட்டது.

அவர்கள் கைது செய்யப்பட்ட உடன், நாகர் கிளர்ச்சிக்காரர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படும் ஒரு பள்ளத்தாக்கான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அப்பயிற்சி முகாமில் ஏறத்தாழ இருநூறிலிருந்து மூன்னூறு நாகர்வரை, பலவிதமான துப்பாக்கிகளைக் கையாளுவதற்கான பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 13 நாட்களுக்குப் பிறகு, சிமா என அழைக்கப்படும் இடத்தில் நடைபெற்று வரும் கிளர்ச்சிக்காரர்களின் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். நீதிபதியாக அமர்ந்தவர் மிக உயர்தரமாகக் கற்றிருக்கும் நாகர் ஆவார்.

'மார்ச் 20-ல் பிரகடனப்படுத்தப்பட்ட நாகர் நாட்டின் சட்டத்தை ஏன் மீறினாய்?' என, இரண்டு அதிகாரிகளையும், அவ்வறமன்றத் தலைவர் கேட்டார்.

அதுபற்றி தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும், தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்றும் அவர்கள் அறிவித்தனர்.

பிறகு அவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டு, பதினைந்து நாள் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, பின்னர், நாகமலைக்கு அண்டையில் உள்ள புகைவண்டி நிலையத்தில் கொண்டு வந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தங்களை ஒன்றும் நாகர்கள் இம்சிக்கவில்லை என அந்த அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஒரிசாவின் இயற்கை வளங்களைப் பயன்படுத்த!

ஒரிசா மாநிலத்தின் இயற்கை வளங்களைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்துவதற்காக, 'சுரங்கக் கார்ப்பரேஷன்' ஒன்று நிறுவ ஒரிசா மாநில சர்க்காரும், டெல்லி சர்க்காரும் கூட்டாகச் சேர்ந்து முடிவு செய்திருக்கிறார்கள்.

டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்.

சம்யுக்த மராட்டியக் கிளர்ச்சி

10 வழக்கறிஞர்கள் கைது

பம்பாய், ஏப். 18—

சம்யுக்த மராட்டியம் கோரி கிளர்ச்சியிலீடுபட்டதாக இங்கு இன்று இரு பெண்கள் உட்பட 10 வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இதுவன்றியில் வேறு 18 பேர்களும் கைதாயினர் என்று தெரிகிறது.

நியமித்த குழு கருத்தறிவிக்கு முன்!

22,000 அம்பர் சர்க்கா உற்பத்தியாம்

புதுடில்லி, ஏப். 19—

அம்பர் சர்க்கா, சிக்கனமாக நூல் உற்பத்திக்கு உதவக்கூடியதுதானா என்பதைக் கண்டறிந்து கூற நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையைத் தருமுன்பே, இந்த மாதத்திலேயே சுமார் 22,000 அம்பர் சர்க்காக்களைத் தயாரிப்பதற்கு இந்திய சர்க்காரின் உற்பத்தி இலாகா அனுமதியளித்து விட்டதாகத் தெரியவருகிறது.

அம்பர் சர்க்கா உற்பத்தித் திட்டத்திற்காக, இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ 30 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது நினைவிருக்கலாம்.

நியமிக்கப்பட்டுள்ள குழுவின் முடிவு தெரிந்தபின், அம்பர் சர்க்கா பெரும் அளவில் தயாரிக்கப்படுமாம்.

'வகுப்புஅடிப்படை கொண்டவட்டார ஏற்பாட்டை ஏற்கோம்'

'ஏப். 22-ல் கண்டன நாள் கொண்டாடுக'

நிரந்தர வட்டார ஆய்வுக் குழு அமைப்பை எதிர்த்து பஞ்சாப் இந்துக்கள் கிளர்ச்சி

வகுப்பு அடிப்படையில், பஞ்சாப் மாகாணத்தை இரண்டு வட்டாரங்களாகப் பிரிப்பதை, மகா பஞ்சாப் சமிதி பலமாக எதிர்க்கத் தொடங்கி இருக்கிறது.

நிரந்தர வட்டார ஆய்வுக் குழு ஏற்பாட்டைக் கண்டிக்கும் தினமாக ஏப்ரல் 22-ம் நாளை, அந்த சமிதி குறிப்பிட்டிருக்கிறது.

வட்டார ஆய்வுக் குழு ஏற்பாடு, 'வகுப்பு வேற்றுமையை விரிவாக்குவதுடன், ஜாதிப் பிளவையும் தீவிரமாக்கும்' என சமிதி கருத்தறிவித்திருக்கிறது.

அவ்வேற்பாடு, பஞ்சாபில் இரட்டை ஆட்சி முறையை ஏற்படுத்திவிடுவதுடன், இரு வட்டார ஆய்வுக் குழுவுகளுக்கும் பஞ்சாப் அரசாங்கத்திற்கும் இடையில் சச்சரவை உண்டாக்கவும் செய்யும்.

இவ்வேற்பாடு மகா பஞ்சாப் சமிதிக்கு, இந்தியப் பிரதமர் அளித்த வாக்குறுதிக்கு முழுதும் மாறுபட்டதாகும். அதனால், தினசரி வாதப் பிரதிவாதங்களிலும், நெருக்கடிகளிலும் கவர்னர் சிக்க வேண்டி வரும்.

அக்குழுக்களின் தலைவர்களாக அமைச்சர்களை ஏற்றுக்கொண்டு இருப்பது, அமைச்சரவைக்குள்ள கூட்டுப் பொறுப்பு கோட்பாட்டை மீறுவதாகும். மாகாண சட்டசபைக்கும், ஆய்வுக் குழுக்களுக்கும் தனித்தனியே உள்ள பொறுப்புகளைத் திட்டவட்டமாக வரையறை செய்வதும் சாத்தியமன்று. அகாலியர்களைத் திருப்தி செய்யவே இமாசலப் பிரதேசத்தை பஞ்சாப் மாகாணத்துடன் யூனியன் அரசாங்கம் சேர்க்காமல் இருந்திருக்கிறது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை மகாபஞ்சாப் சமிதி வெளியிட்டிருக்கிறது. ஒரு போராட்டக் குழுவையும் சமிதி உருவாக்கி உள்ளது.

நிலக்கரி உற்பத்தித் திட்டங்களுக்குத் தேவையான 60 துளையிடும் சாதனங்களுக்கு வெளிநாடுகளில், இந்தியா 'ஆர்டர்' கொடுத்துள்ளது. அவை சோவியத் யூனியன், சுவீடன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து வாங்கப்படும்.

போர் நிறுத்தம்!

எகிப்தும் — இஸ்ரேலும், நிபந்தனையின்றி எல்லையில் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளதாக ஐ. நா. செயலாளர் அறிவித்திருக்கிறாராம்.

வட கிழக்கு எல்லைப் பிரதேசத்தில், தற்போது மொத்தம் ஆறு சமுதாய அபிவிருத்தி வட்டாரத் தொகுதிகள் வேலை செய்து வருகின்றன;

'கோயில்களுக்கு நிதி உதவி தொடர்ந்து வேண்டும்'

டெல்லி சர்க்காரிடம் திரு-கொச்சி தமிழர்கள் முறையீடு

சென்னை மாநிலத்தில் இணைய விருக்கிற திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளில் உள்ள கோயில்களுக்கு தேவஸ்வம் நிதியிலிருந்து இதுவரை அளித்து வந்ததுபோலத் தொடர்ந்து நிதியளிக்க வழிசெய்ய வேண்டுமெனக் கோரி டெல்லி சர்க்காருக்கு சுசீந்திரம், பரக்கை முதலிய இடங்களிலிருந்து எண்ணற்ற தந்திகள் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது.

இது குறித்து டெல்லிக்கு நேரில் விளக்கம் தருவதற்காக டாக்டர் நடராசன் என்பார் டெல்லிக்குச் சென்றிருக்கிறாராம்.

தமிழ் மாநில மக்கள் சபை உறுப்பினர்களும் இது குறித்து தனி அக்கரை காட்டி வருகின்றனராம். டெல்லி தனது முடிவை மாற்றிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

25 புதிய கலங்கரை விளக்கங்கள்

மத்திய சர்க்காரின் கலங்கரை விளக்க இலாகா, 1955-56-ம் ஆண்டில், மொத்தம் ரூ. 22 இலட்சம் செலவு மதிப்பில், புதிதாக 25 கலங்கரை விளக்கங்களை அமைத்தது; சுமார் ரூ 2 இலட்சம் செலவு மதிப்பில் எட்டு கலங்கரை விளக்கங்கள் சீரமைக்கப்பட்டன.

கல்கத்தா துறைமுகம் தூங்குகிறது

8,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

65 கப்பல்கள் காத்து நிற்கின்றன

கல்கத்தா, ஏப். 19—

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர்கள் 8,000 பேர் வரை பெரியதொரு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதனால் ஏற்பட்டுள்ள நிலையைச் சமாளிக்க துறைமுக நிர்வாகிகள் 'அவசர நிலை' பிரகடனம் செய்திருக்கிறார்களாம்.

இந்த உத்தரவு 3 திங்களுக்கு அமுலில் இருக்குமாம்.

மொத்தம் உள்ள 18,000 துறைமுகத் தொழிலாளரில், 6,000 பொது சரக்குகள் காங்கி தொழிலாளர்களும், 2,000 நிலக்கரி ரேவுத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

மொத்தம் 65 கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதி வேலை நடைபெற முடியாமல், அவை கடலிலேயே தூங்குகின்றன. மேலும் அடுத்த வாரம் 20 கப்பல்கள் வரவிருக்கின்றன.

இதற்குள் நிலைமை சீர்திருந்தாவிடில், கப்பல்கள் பல தங்க நேரிடும் என்றும் தெரிய வருகிறது.

30 ஆயிரம் டன் சாமான்கள் இறக்கப்பட வேண்டியுள்ளன— 75,000 டன் ஏற்றுமதியாக வேண்டியுள்ளன என்றும் நிலை விளக்கம் தரப்படுகிறது.

கடந்த 15-ந்தேதி யன்று, மாத இடையில் தரப்படும் சம்பளம் ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டதாம், நிர்வாகக் காரணங்களைக் காட்டி!

அன்றையத் தினமே வேலை நிறுத்தம் துவக்கப்பட்டது என்றும், நிலக்கரி ரேவுத் தொழிலாளர்கள் இதரர்களைத் தற்காலிகமாக வேலைக்கு வைத்துக் கொள்வதையும் எதிர்த்திருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—4—'56 வெள்ளி

பொறுக்கி எடுத்தக் 'கங்காணிகள்!'

[2]

" பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தலைமுறைத் தலைமுறையாக, அக்கங்காணித் தொழிலை, அவர்கள் செய்து வரவில்லையா? "

இவ்வாறு, கனம் காமராசர் கூறிய அபாண்டப் பொய்யுரைக்கு நேற்று ஓரளவு பதில் கூறினேம். இன்றும், அதைத் தொடர்ந்தே மேலும் சில கூறுகிறேம்.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி இந்தியத் துணைக்கண்டத்தில் இறக்குமதியான பொழுதும், அதை வாழ்த்தி வரவேற்கும் துரோகத்தை நீதிக்கட்சி செய்யவில்லை. அதைப் போன்றே, அது, வெளியேற் முன்வந்த பொழுதும், அதனுடன் அணிவகுத்து நின்று, அதை இங்கேயே இருக்க வேண்டுமென்றக் கங்காணித் தனத்தையும் நீதிக்கட்சி நினைக்கவும் இல்லை. இடைக் காலத்திலும் நீதிக் கட்சி, வெள்ளை ஆட்சி என்றென்றும் நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டுமென்று நித்தம் நித்தம் வேண்டிக் கொண்டும் இருக்கவில்லை.

1919 வரையில் இங்கு, வெள்ளையரின் எதேச்சாதிகார ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அதன் பிறகுதான் குறுகியதன்மையில் பொறுப்பாட்சி எனக் கூறத்தகும் ஆட்சிமுறை, மெள்ள மெள்ள இங்கு புகுத்தப்பட்டது.

நாட்டாட்சியில் குறைந்த பட்சம் மக்களின் கருத்தும் இடம் பெறும்வகையில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி அமைப்பில், மக்களின் ஒப்புதலுடன் நீதிக் கட்சி பங்குகொள்ள முன் வந்தது. கிடைத்த குறைந்த அளவு அதிகாரத்தைக்கொண்டு, பின்தங்கிக் கிடந்த மக்களுக்குக் கூடுமான வரை, முன்னேற்றத்திற்கான வழிவகைகளை நீதிக் கட்சி நிறைவேற்றியது.

நீதிக் கட்சியின் அடிப்படைக் கொள்கையாக, அக்கட்சி துவங்கப்பட்ட காலத்திலேயே, குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான், தனது, இறுதியான அரசியல் இலட்சியமாகும் என ஐயத்திற்கிடமின்றி அறிவித்திருந்தது. ஆரம்ப காங்கிரசின் இலட்சியமும், அதே குடியேற்ற நாட்டு அந்தஸ்த்துதான் என்பதையும், இத் தருணத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

பிரிட்டிஷ் அரசை இலட்சியத் தலைமையாக ஏற்றுக் கொண்டு, மற்றத் துறைகள் அனைத்திலும் இங்கிலாந்தைப் போலவே இந்தியத் துணைக் கண்டமும் சமத்துவமாகத் தன்னுட்சி நடத்திவரும் கோட்பாடுதான், குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தின் உள்ளடக்கமாகும். ஆஸ்திரேலியா, கனடா நியூசிலாந்து முதலிய நாடுகள் இந்தத் தன்னுட்சி அந்தஸ்தைத்தான் இப்பொழுதும் அனுபவித்துக் கொண்டு வருகின்றன.

அதே குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தைப் பெறுவதுதான், தனது முடிவான அரசியல் இலட்சியம் என்று நீதிக்கட்சி உறுதி செய்தது என முன்னர் குறிப்பிட்டோம். அதன் காலம் 1919 முதல் 1921 வரையில் உள்ள இடைப்பட்ட காலமாகும்.

குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் தனது இறுதி இலட்சியம் எனக் கொண்ட அதே ஆண்டுக் காலங்களில்தான், இந்திய தேசீய காங்கிரசும், தனது முடிவான அரசியல் இலட்சியமும் குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தாகும் எனத் தீர்மானித்திருந்தது.

குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தைக் கோரிவந்த காங்கிரஸ், 1927-ம் ஆண்டில்தான், சென்னையில் காலஞ்சென்ற டாக்டர் அன்சாரி தலைமையில் கூடி, அதைக் கைவிட்டு, ஒப்புக்கு சுயராஜ்யம் என்ற கோரிக்கையைத் தீர்மானமாக்கிற்று. அது அப்படியே நீடிக்கவில்லை. ஓராண்டுக் காலத்திலேயே சென்னையில் நிறைவேற்றிய சுயராஜ்ய இலட்சியத் தீர்மானத்தைத் தூர எறிந்துவிட்டு, காலஞ்சென்ற மோதிலால் நேரு தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், மீண்டும் ஒருமுறை குடியேற்ற நாட்டு அந்தஸ்த்துத் தீர்மானத்தை நிறைவேற்றியது,

சுயராஜ்யத் தீர்மானத்தைக் கைவிட்டு, மறுபடியும் குடியேற்றநாட்டுஅந்தஸ்தை ஏற்கக் கல்கத்தா காங்கிரஸ் ஒரு நிபந்தனையை விதித்தது. அதாவது, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஓராண்டுக்காலத்திற்குள்ளாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துத் தருவதாக இருந்தால், அதை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும் என்பதுதான், அந்த நிபந்தனையாகும்.

கல்கத்தா காங்கிரசின் நிபந்தனைப்படி, ஓராண்டுக்காலத்திற்குள்ளாக காங்கிரசின் கோரிக்கையை ஏற்க பிரிட்டிஷ் ஆட்சி முன்வரவில்லை. எனவே, 1929 இறுதியில், பண்டித ஜவகர்லால் நேரு தலைமையின்கீழ் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில், மீண்டும் பூரண சுயராஜ்யத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகுதான் 1930-ம் ஆண்டு ஜனவரி 26-ந் தேதியை, இந்தியாவின் விடுதலை தினமாகக் காங்கிரஸ் கொண்டாடத் தொடங்கியது.

இதுவரை குறிப்பிட்ட விஷயங்கள் அனைத்தையும் பின்னணியாக வைத்துக்கொண்டுதான், இனி குறிப்பிட இருக்கும் நிகழ்ச்சியை நோக்க வேண்டும். அப்பொழுதுதான் பொறுக்கிஎடுத்தக் 'கங்காணிகள்' யார் என்பதை விளக்கமாகத் தெரிந்துகொள்ளுவது எளிதாகும்.

குடியேற்ற நாட்டு அந்தஸ்த்துதான் தங்களுடைய இறுதி அரசியல் அபிலாஷை எனத் தீர்மானித்துக்கொண்டிருந்த நீதிக் கட்சியினர், இரட்டை ஆட்சி அமைப்பில் பங்கு கொண்டது, எந்த வகையிலும் முரண்பாடு கொண்டதாகாது. பிரிட்டிஷ் மன்னரை இலட்சியத் தலைவராகக் கொண்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்த்துதான் தங்களுடைய அரசியல் அபிலாஷை எனக் கொண்டவர்கள், அதே மன்னர் பெயரால் இம்மாகாணத்தில் நடைபெற்ற ஒருஆட்சியில் பங்கு கொண்டது நியாய விரோத மானதாக இருக்க முடியாது. இறுதி இலட்சியமும் நடைமுறையும் ஒத்து அமைந்திருக்கும் அறநெறித் தன்மைகொண்டு விளங்குவதே அது எனக் கூறுவது, பொருந்தாக்கூற்று எனப் புத்தியுள்ள எவரும் கூறுர். ஆனல் காங்கிரசின் தன்மை என்ன என்று பார்ப்போம்.

பூரண சுயராஜ்யம்தான் தங்களுடைய இறுதி இலட்சியம் எனத் தீர்மானித்தவர்கள், அதற்குக் குறைவான எந்த ஒரு அரசியல் அமைப்பிலும் பங்குகொள்ள ஆசைப்படாமல் இருப்பதுதான் முறையாகும். அதைத்தான் அரசியல் நேர்மை எனவும் சொல்ல முடியும்.

அந்த அரசியல் நேர்மையைக் காங்கிரஸ் அலட்சியப்படுத்தி நடந்துகொள்ளத் துணிந்துவிட்டது. மாகாணங்களில் இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டு மாகாண சுயாட்சி முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதும், 1938-ல் காங்கிரஸ் சட்ட சபைக்குள் நுழைந்து அதிகாரத்திலும் அமர்ந்தது. அதன் விளைவாக, இந்தியாவில் 'மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் ஆட்சி' செவ்வனே நடைபெற அகில இந்திய தேசீய காங்கிரஸ் ஒத்துழைத்தது.

பூரண சுயராஜ்ய இலட்சியத்தை உறுதி செய்த காங்கிரஸ், இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சியைக் கட்டிவளர்க்க முன்வருவது என்பது, நூற்றுக்கு நூறு முரண்பட்ட செயலாகும். காங்கிரசின் இந்தப் பதவி வெறிக் கூத்தைத்தான், அறத்தின் நீங்கிய அதிக்கிரமச் செயல் எனக் கூறவேண்டும். இதைத்தான், ஒழுக்கத்தை மறந்த, வடிகட்டின அரசியல் விபசாரம் என உரைக்க வேண்டும்.

குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தே தன்னுடைய முடிவான அரசியல் கோட்பாடு எனக்கொண்ட நீதிக்கட்சி, பிரிட்டிஷ் ஆட்சியில் பங்கு கொண்டது, எந்த வகையிலும் தவறுடையதாகாது என முன்னர் குறிப்பிட்டோம். அந்தத் தவறற்ற நடைமுறையைத்தான், 'பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தலைமுறை தலைமுறையாகப் புரியப்பட்ட கங்காணிப் பணி' என கனம் காமராசர் சித்தரிக்கிருர்.

அவர் குற்றச்சாட்டு சரியானதே என வாதத்திற்காக ஒப்புக் கொள்ளுவோம். கொண்ட இலட்சியத்திற்கும் நடைமுறைக்கும் முரண்பாடு இல்லாது நடந்து கொண்டதே கங்காணித்தனம் எனக் கூறப்படுமானல், பூரண சுயராஜ்யம் தவிர்த்து வேறு எதையும் தொடமாட்டோம் எனச் சூளுரைத்துக் கொண்டவர்கள், வெள்ளை ஏகாதிபத்திய கவர்னருக்குக் கீழ், இராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, மாகாண சுயாட்சியில் இரண்டறக் கலந்து, 'மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் ஆட்சியை' வெற்றிகரமாக நடத்தத் துணிந்த, அரசியல் பித்தலாட்டத்தை,

பொறுக்கி எடுத்தக் கங்காணித் தனம் என்றுதானே கூற வேண்டும்?

தனது கட்சியின் கங்காணித் தனம் பொறுக்கி எடுத்த ஒன்ருக இருக்கும்பொழுது, நமது கழகம் நேரடியாக பிரிட்டிஷ் ஆட்சியில் பங்கு கொள்ளாத நிலையிலும், நம்மைப் பார்த்து, 'பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தலைமுறைத் தலைமுறையாக கங்காணிப் பணி புரிந்தவர்கள்' என, அதிலும்ஒரு முதலமைச்சர் முன்பின் ஆராயாது குற்றம் சாட்டுவது என்ருல், அவர் மதியை என்ன என்பது? அவருக்கு, அது, இருக்கிறதா இல்லையா என்றுகூட அல்லவோ ஐயப்பட வேண்டியதாகஇருக்கிறது,

சேலம் இரும்புக்கனி மட்டரகமானதா?

ஓரவஞ்சனையை மறைக்க வடவர் செய்யும் சதி?

கிரீன்ஸ், தாமஸ் ஹாலண்ட், கௌடர்ட் ஆகிய நிபுணர்களின் கருத்தென்ன?

கர்னூல் தோழர் தரும் விவரங்கள்

டில்லி ஏகாதிபத்தியவாதிகள், தென்னகத்தில் பெரும் தொழில்கள் துவங்காமலிருப்பதற்கு, கூறிவருகிற பல்வேறு நொண்டிச் சமாதானங்களை, தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டோர் கவனித்தாக வேண்டும்.

தென்னுட்டிற்குத் தாங்கள் புரியும் வஞ்சனையை மறைக்க, வடவர் மிகத் துணிச்சலோடு, பெரும் பொய்யுரைகளைக் கூறி வருவதையும் உணர்ந்தாக வேண்டும்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்காததற்கு, 'நிலக்கரி எங்கே இருக்கிறது?' என்ற கேள்வியையே காரணமாகக் காட்டினர்கள். கேள்விக்குச் சூடான பதில் தரப்பட்டபின், இப்போது சேலத்தில் கிடைக்கும் இரும்புக்கனிகளில் இரும்புச் சத்து குறைவு என்றும், இதர பாகங்களில் கிடைப்பதைவிட மட்டரகமானது என்றும், டில்லி வட்டாரங்கள் கருதுவதாக, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழின் தனி நிருபர் ஒருவர் கடந்த 14-ந் தேதியன்று செய்தி தந்திருக்கிருர்.

டில்லியாளர்கள், எத்தனை பைரிய பொய்யுரை வழங்கியுள்ளார்கள் என்பதை கர்னூலிலிருந்து தோழர் நா. இதயத் தோழன் என்பார் வேதனையோடு கடிதமூலம் தெரிவித்திருக்கிருர்.

சேலம் இரு ்பு மட்டமானது என்று பொய்யுரை கூறி, அங்கு தொழிற்சாலை துவங்காமலிருக்கும் தங்கள் வஞ்சக நோக்கினை—ஏகாதிபத்தியப் போக்கினை மூடிமறைத்துவிட நினைக்கின்றனர் போலும்.

சேலம் இரும்புக் கனிகள் எத்தனை உயர்தரமானவை என்பதை விளக்க ஆதாரங்கள் எத்தனையோ தரமுடியும். தோழரின் அந்தக் கடிதம் இங்கு தரப்படுகிறது :—

14—4—56ம் நாள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் 'சேலத்தில் கிட்டும் இரும்பு தாதுக்கள் இந்தியாவின் மற்றைய பாகங்களில் கிடைக்கும் தாதுக்களைக் காட்டிலும் இரும்புச் சத்து குறைவான அளவில் கொண்ட மட்டரக வகையைச் சார்ந்தது' என்ற கருத்து டில்லி மத்திய ஆட்சி வட்டாரங்களில் நிலவுவதாக தனி நிருபர் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

சேலத்து இரும்பு தாதுக்கள் எத்தகைய வளமானது என்பதை எல். பி. கிரீன்ஸ் (L. B. Greens M. B. E.) என்ற வெள்ளையர் தான் எழுதியுள்ள 'The Iron Ores of Salem' என்ற நூலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

சேலம் மாவட்டச் சரிதம் (Salem Dt. Gezetteer) என்ற நூலில் சேலத்து இரும்புக்கனிகள் **60** சத விகிதம் இரும்புச் சத்துக் கோண்ட சிறந்த வகையைச் சார்ந்த தாகும் என்று எழுதப்பட்டுள்ளது.

1914-ம் ஆண்டில் மிஸர்ஸ். கௌடர்ட் என்ற வெள்ளையர் அவரின் பாண்டிச்சேரி நிறுவனம் சேகரித்த கோல்லிமலை (சேலம்) இரும்புக்கனியை இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சிக் கழக உதவியோடு பரிசோதித்து **65** சதவிகித சத்துக் கோண்ட இரும்புக் கனிகள் சேலத்தில் உள்ளதாக நிரூபித்துள்ளார்.

அடுத்து சர். தாமஸ் ஹாலண்டு என்பார் சேலத்து இரும்பு தாதுக்களை பரிசோதனை செய்ததன் மூலம் **69** சத விகித சத்துக்கோண்ட முதல் ரக இரும்புக் கனிகள் சேலத்தில் உள்ளதை ஆதாரங்களோடு விளங்கச் செய்துள்ளார்.

இறுதியாக 1917—ம் ஆண்டு இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சிக் கழகம் சேலத்து கஞ்ச மலையில் கிட்டும் இரும்புக் கனிகளை ஆராய்ந்தபோது 92·4 சதம் அதாவது (FE3O4) என்ற அளவில் உயர்ந்த சத்துக்கோண்ட சிறந்த இரும்புக் கனிகள் சேலத்தில் இருப்பதை கண்டு பிடித்தது.

பொதுவாக **60** சதவிகிதச் சத்துக் கோண்ட இரும்புக் கனிகளே உலகில் சிறந்தவை என்று அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கும்போது **92·4** சதவிகிதச் சத்துக்கோண்ட சேலத்து இரும்பு எந்த வகையில் தரக் குறைவானது என்று நம்மால் புரிந்துகோள்ள முடியவில்லை.

கனரகத் தோழில் அமைக்க வேண்டும் என்று கோரும் தென்னவர்தம் கண்ணை மறைக்க திரை மறைவில் சதி நடக்கிறதா?

'ஐரோப்பிய கவுன்சில்' என்ற நிறுவனத்தில் ஆஸ்திரியா நாடு 16-வது உறுப்பினராகச் சேர்ந்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

பாடகனாக மாறிய கொள்ளைக்காரன்!

காங்கிரசின் புகழ் பாடுகின்றானாம்!

அமிர்தசரஸ், ஏப். 19—

அவன் ஒரு பிரபல கொள்ளைக்காரன் — கேடி — ஊரறிந்தவன். ஜகத்சிங் ஜக்கா என்ற அந்த ஜகஜ்ஜாலப் புரட்டன் இப்போது, ஒரு பாடகனாக மாறிவிட்டானாம்

30 வயதான அவன் இப்போது, பஞ்சாப் பொதுமக்கள் தொடர்பு நாடகக் கழகத்தில் ஒரு நடிகனாம்.

அவன் சோலாசாப் எனும் இடத்தில், பாடல் பாடியிருக்கிறான் பெரும் கூட்டம் ஒன்றில்.

சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி சாதித்தவை குறித்து அந்த முன்னாள் கொள்ளையன் பாட்டுப் பாடினானாம்.

கொள்ளைகொண்டு பழக்கப்பட்ட அவனால், 'மக்களின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ள முடியும்' என்று கருதுகிறார்களோ என்னவோ?

தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள்

அதிகரிக்க தேர்தல் குழு சிபாரிசு

சென்னை, ஏப். 18—

சென்னை சட்டசபையில் தாழ்த்தப்பட்டோரின் தொகுதிகளை அதிகரிப்பது பற்றி, தேர்தல் குழு தெரிவித்துள்ள யோசனைகள் ஒரு அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதன்படி திருவண்ணாமலை தாலுகா (தூரிஞ்சாபுரம் பிர்க்கா தவிர), செங்கம் தாலுகா (செங்கம் பிர்க்கா தவிர) இரண்டும் சேர்ந்த திருவண்ணாமலை தொகுதி இரட்டை உறுப்பினர் தொகுதியாக இருக்கும். இதில் ஒரு இடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு.

ஏர்க்காடு தாலுகா, ஓமலூர், கடயம்பட்டி பிர்க்காக்கள், சேலம் தாலுகா (சேலம், வீரபாண்டி பிர்க்கா தவிர) கொண்ட ஓமலூர் தொகுதியும் இரட்டை உறுப்பினர் தொகுதியாக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஓர் தொகுதி ஏற்படுத்தப்படுகிறது. நன்னிலம் தாலுகா (நன்னிலம், திருவீழி, மழலை, கொடவாசல் பிர்க்காக்கள் தவிர), நாகபட்டினம் தாலுகா (நாகபட்டினம், கீழையூர் பிர்க்காக்கள் தவிர), மன்னார்குடி தாலுகாவிலுள்ள சாத்தனூர் பிர்க்கா ஆகியவை கொண்ட திருவாரூர் தொகுதி புதிதாக ஏற்படுத்தப்படும். இதுவும் இரட்டை உறுப்பினர் தொகுதியாகும்.

திருத்துறைப்பூண்டி இரட்டை உறுப்பினர் தொகுதியில் எவ்வித மாறுதலும் இல்லை. ஆனால், திருத்துறைப்பூண்டி தாலுகா, மன்னார்குடி தாலுகாவிலுள்ள பாலையூர், கோட்டூர் பிர்க்காக்கள் சேர்ந்திருக்கும்.

நாகப்பட்டினம், மன்னார்குடி இரட்டை உறுப்பினர் தொகுதி ஒரு உறுப்பினர் தொகுதியாக்கப்படும். இங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இடம் ரத்தாகும்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இந்தியக் கப்பல் போக்கு வரத்து கம்பெனிகளுக்கு, சரக்கு, பிரயாணிக் கட்டணங்கள் மூலம், 1952-54-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 8,59,00,000 வருமானமாகக் கிடைத்தது. 1954-55 ஆண்டில் அவ்வகையில் கிடைத்த வருமானம் மொத்தம் ரூ. 10,47,00,000 ஆகும்.

விலைவாசிகள் ஏற்றம்

சர்க்கார் காரணம் அறிய முற்படுகிறது

சென்னை, ஏப். 18—

உணவுப் பண்டங்கள், மற்றும் பொருள்களின் விலை வேகமாக ஏறிவருவது குறித்து உடனடியாக அறிக்கை ஒன்று தருமாறு, ரெவின்யூ போர்டாரை சென்னை சர்க்கார் கேட்டிருக்கிறார்களாம்.

வரப்போகிற அறுவடையை ஒட்டி, பண்டங்கள் தாராளமாகக் கிடைக்கவிருக்கிற நிலையில் பொருள்களின விலை இப்படி ஏறுவதற்கு நியாயமே இல்லை என்றும் சர்க்கார் கருதுகிறார்களாம்.

'காமின்பார்ம்' கலைந்துவிட்டது?

பாலன், ஏப். 17—

கம்யூனிஸ்டு அகிலம் (தகவல் அறிவிப்பு நிறுவனம்) கலைக்கப்பட்டுவிட்டதாக 'பிரான்ஸ் ஸோயர்' என்ற பிரெஞ்சுப் பத்திரிகையின் விசேஷ நிருபர் தகவல் அனுப்பியிருக்கிறார்.

1947 அக்டோபர் 5-ந் தேதி அன்று ஒன்பது ஐரோப்பிய தேசங்களின் கம்யூனிஸ்டுப் பிரதிநிதிகளைக் கொண்டு போலந்தில் நடந்த இரகசியக் கூட்டத்தில் இது அமைக்கப்பட்டது.

1943-ல் கலைக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் இடத்திலேயே இது நிறுவப்பட்டது.

1948-ல் இந்த நிறுவனம் யூகோஸ்லாவிய கட்சியை அப்புறப்படுத்தியது.

சோவியத் உப-பிரதம மந்திரி அனஸ்டஸ் மிகோயான் இச்செய்தியை இன்று உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதம் செய்தார். நாளை சோவியத் பத்திரிகைகளில் நிறுவன கலைப்புச் செய்தி வெளியாகும் என்று அவர் கூறினார்.

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்டது, யுகோஸ்லாவியாவிலிருந்து தொடங்கும் ஆங்கிலோ-சோவியத் சம்பாஷணைகளுக்குப் பூர்வாங்கமாக எடுக்கப்பட்ட தீர நடவடிக்கை என்று லண்டன் இராஜீய வட்டாரங்கள் கருதுகின்றன. ஆசியாவிலுள்ள நடுநிலையாளருக்கும் இது சந்தோஷமளிக்கும். சென்ற கோடையில் ரஷ்யா விஜயம் செய்தபோது இந்தியப் பிரதம மந்திரி நேரு இதை வற்புறுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

நிறுவப்பட்டதிலிருந்து கம்யூனிஸ்டு அகிலம் (செய்திப் பிரிவு) புரிந்த நற்செயல்களை விவரித்த பிறகு அதைக் கலைப்பதற்கான காரணத்தையும் உத்தியோகபூர்வமான அறிக்கை விவரித்தது.

கலைப்பதற்கான காரணங்கள் வருமாறு:—

(1) சென்ற சில ஆண்டுகளில் சர்வதேச நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள்.

(2) சோஷலிசம் ஒரே தேசத்தின் எல்லையைக் கடந்து, உலக அமைப்பாக பரிணமித்திருப்பது

(3) ஐரோப்பிய, ஆசிய தேசங்கள், சோஷலிஸ்ட், சோஷலிஸ்டல்லாத தேசங்களெல்லாம் சமாதான நண்பர்களாக "சாந்தி மண்டலமாக" அமைந்திருப்பது.

(4) முதலாளித்துவ ஆதீன, காலனி ஆதிக்க தேசங்களில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் வல்லமை பெற்றிருப்பதால், யுத்தம் பிற்போக்கு இவற்றை எதிர்ப்பதில் ஜரூராக ஈடுபட்டிருப்பதுடன், அந்தந்த தேச மக்களின் சுதந்திரப் போராட்டத்திலும் உதவி புரிவது

(5) பாட்டாளி இயக்கங்களில் பிளவு காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகள், சமாதானம், சோஷலிசத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை வலுத்தல்.

எனினும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தக்கபடி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும்.

நகரசபை ஊழியருக்கு வீடு கட்டித் தர முடிவு

சென்னை, ஏப். 18—

குறைந்த வருமானமுள்ள நகரசபைத் தொழிலாளர், குமாஸ்தாக்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஒரு அறை கொண்ட வீடுகளும், இரு அறை வீடுகளும் கட்டித் தர சென்னை நகரசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஓரறை வீடு அமைக்க ரூ. 2,325 ஆகுமென்றும், இரு அறை வீடு கட்ட ரூ. 5,450 செலவாகுமென்றும் மதிப்பிடப்படுகிறதாம். இவ்வீடுகள் அமைக்கத் தொழிலாளர் 'போனஸ்' நிதியிலிருந்து ரூ 10 இலட்சம் கடனாக எடுக்கலாமெனவும் யோசனை கூறப்பட்டது.

இந்த வீடுகளை வாடகைக்கு விடுவதா அல்லது மாத தவணை அடிப்படையில் கொடுப்பதா என்பது முடிவு செய்யப்படவில்லையாம்.

மேற்கு வங்க — பீகார் இணைப்பு

புதுடில்லி, ஏப். 18—

மேற்கு வங்கம்—பீகார் மாநிலங்கள் சீரமைப்புப் பற்றிய மசோதா கூடியவிரைவில் சபையில் தாக்கலாகுமென நம்புவதாகவும், ஆனால் என்றைக்கு என்பது மட்டும் தெரிவிக்க இயலாதவராக இருப்பதாகவும் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

வங்கம்—பீகார் எல்லைகள் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாகவும், இக்கட்டத்தில் இதுபற்றி எதுவும் கூறமுடியாதென்றும், சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாநிலச் சீரமைப்பு மசோதாவில் மாறுதல் எதும் செய்யப்படவில்லையென்றும், சென்ற மாதம் 16-ந் தேதி ஒப்படைக்கப்பட்ட மசோதாவுக்கும் இப்போதைய மசோதாவுக்கும் வேறுபாடுகள் இல்லையென்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

வடநாட்டிலிருந்து பிரிந்தால் தென்னாடு வாழமுடியாதா?

இராயப்பேட்டையில் பொதுச்செயலாளர்

சென்னை, இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 18—4—56 அன்று சீனிவாசபுரம் இரண்டாவது தெருவில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஏராளமான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தினரை வரவேற்று வட்டக் கிளைச் செயலாளர் தோழர் கோ. இளவரசு பேசினார்.

அடுத்து தோழர் மு. புரட்சிமணி கழகக் கொள்கைகளை விளக்கி சிறிது நேரம் பேசினார்.

பொதுச் செயலாளர் அவர்கள், மறுநாள் நிகழ்ச்சிக்கு வெளியூர் செல்லும் பொருட்டு, சீக்கிரமே செல்லவேண்டியிருந்ததால், முதலில் சொற்பொழிவாற்றினார்.

அவர், வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிந்துவிட்டால் வாழமுடியாது என்று பேசுகிறவர்களுக்கு, புள்ளி விவரங்களைக் கொட்டிக் காட்டி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிந்துவிட்டால் வாழமுடியாது என்று கூறுவோருக்கு, திராவிடத்தைவிட குறைந்த நிலப்பரப்பு—திராவிடத்தைவிட குறைந்த மக்கள் தொகை—திராவிடத்தைவிட குறைந்த வளம் கொண்ட உலக நாடுகளின் பட்டியலைத் தந்து அவை எல்லாம் தனித்து நின்று வாழும் தகுதியும் பெருமையும் பெற்று விளங்கும் போது, தென்னாடு—திராவிடம் ஏன் வாழமுடியாது என்று கேட்டார் பொதுச்செயலாளர்.

அவர் தந்த புள்ளி விவரங்களைக் கேட்ட மக்கள், கைதட்டிப் பெருத்த ஆரவாரம் செய்து, 'வாழமுடியாது' என்று காரணம் கூறாமலேயே பேசிய பெரிய மனிதர்களை எள்ளிநகையாடினர்.

பின்னர் தோழர் முகவை. ஆர். எஸ் பாண்டியன் சிறிதுநேரம் பேசினார்.

இறுதியாக, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், கழகக் கொள்கைகளை விளக்கியும் மாநில மாநாட்டின் முக்கியத்துவம் குறித்தும், சட்டசபையில் தோழர் இராசன் அவர்களைக் கேலி பேசிய மந்திரி சுப்பிரமணியத்திற்குத் தக்க பதில் தந்தும் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

"மாணிக்கவேலர், பரமேசுவரன் ராமநாதபுரம் ராஜா, ஏ. பி. ஷெட்டி, ஆகிய நான்கு மந்திரிகளும், முன்னைய நீதிக் கட்சியில் பணி புரிந்தவர்கள்.

"முன்னாள் அமைச்சர் முத்தையாவின் செயலாளராக, மாணிக்கவேலரும், யுத்தப் பிரச்சாரகராக தோழர் இராஜனின் கீழ் பரமேசுவரனும், பணியாற்றி யிருக்கிறார்கள்.

"ராமநாதபுரம் ராஜா, காங்கிரசின் பரம விரோதியாக இருந்தவர். நீதிக்கட்சியில் இருந்தவர். அதேபோலத்தான் ஏ. பி. ஷெட்டி; அதேபோலத்தான், இன்னும் எத்தனையோ பேர்கள். இவர்களை எல்லாம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டிருக்கிற கனம் சுப்பிரமணியம், 'பி. டி. இராசன் நீதிக் கட்சியிலிருந்தவர், அவர்களை எல்லாம், வேறு ஒரு நாடாயிருந்தால் சுட்டுத் தள்ளியிருப்பார்கள்' என்று பேசுவது என்ன நியாயம்? என்ன நேர்மை?"

என்று, தோழர் நடராசன் இடித்துரைத்தார்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறலுக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுச்செயலாளருக்கும், துணைப் பொதுச்செயலாளருக்கும், கழகத்தின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டதுடன் மலர் மாலைகளும் பலரால் அணிவிக்கப்பட்டன. (ந. நி.)

புதுவை கிராமங்களுக்கு மின்சார வசதி

புதுச்சேரி, ஏப். 18—

புதுச்சேரி மாநிலத்தில் கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தவும், விசை உற்பத்திக்கும் ரூ. 60 இலட்சம் செலவுகொண்ட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது திட்டத்தின் கீழ் படிப்படியாக நிறைவேற்றப்படும். அதன்படி மின்சார இணைத்தின்கீழ் சராசரி வருமானம் 25 லிருந்து 50 யூனிட்டுகளாக உயரும் என்று தெரியவருகிறது.

சுமார் 60 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படும். விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கிடைக்குமாம்.

அண்மையிலுள்ள விழுப்புரத்திலிருந்து 66 கிலோவாட் 'லைன்' ஒன்றை நல்லெண்ண அறிகுறியாக சென்னை சர்க்கார் அமைத்துக் கொடுத்துள்ளது, மின்சாரக் கட்டணங்களை மேலும் குறைக்கவும் ஆலோசிக்கப்படுகிறதாம்.

ஒரு சதுரமைலுக்கு சராசரி ரூ 33,000 வீதம் மின்சார வசதிக்காக செலவிடப்படும். இது போன்ற இதற்குமுன் இந்தியாவில் வேறெந்த மாநிலமோ, மத்திய அரசினரோ செலவிடவில்லை என்றும் கூறப்படுகிறது.

இங்கிலாந்தில் ரஷ்யத் தலைவர்கள்

இரயில் நிலயத்தில் ஈடன் வரவேற்றார்

லண்டன், ஏப். 18—

ரஷ்யத் தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் தம் குழுவினருடன், இன்று இங்கு வந்து சேர்ந்தனர்.

ரஷ்யக் கப்பல் ஒன்றில் வந்த அவர்கள், 'போர்ட்ஸ் மௌத்' துறைமுகத்தில் இறங்கி அங்கிருந்து, தனி இரயில் மூலம் லண்டன் விக்டோரியா இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கு பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன், வெளிவிவகார மந்திரி செல்வின் லாயிட், முதலானோர் ரஷ்யத் தலைவர்களை வரவேற்றிருக்கின்றனர்.

சுமார் 10 நாட்கள், இங்கிலாந்து நாட்டில், சுற்றுப்பயணம் செய்வர் என்றும் அப்போது அவர்கள் பிரிட்டிஷ் தலைவர்களுடன் முக்கியமான விவகாரங்கள் குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்துவர் என்றும் தெரியவருகிறது.

இந்திய ஆலைகளில் கதிர்களின் எண்ணிக்கை

புதுடில்லி, ஏப். 18—

இந்தியாவிலுள்ள நூலாலைகளில் மொத்தமுள்ள 1,20,30,000 கதிர்கள், 2 இலட்சத்திற்கும் அதிகமான தறிகளில் சுமார் 16,40,000 கதிர்களும், 19,000 தறிகளும் வேலை செய்யவில்லை என்று கைத்தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

1956 ஜனவரித் திங்கள் 1-ந் தேதி இருந்த நிலைமை இது என அவர் கூறியுள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 14 மாநிலங்களில், மொத்தம் சுமார் ரூ. 24 கோடி செலவு மதிப்பில், சுமார் 8,756 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ராணி—கலைச்செழியன்



தோழர் என். வி. நடராசன் அவர்களது செல்வி ராணி—தோழர் ராசா அவர்களின் செல்வன் கலைச்செழியனை கடந்த 15—4—56-ல் அண்ணா அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டபோது எடுத்த படம்.

அல்ஜீரிய விடுதலை கிளர்ச்சி

தலைவர் ஒருவர் சுட்டுக் கொலை

அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சித் தலைவர்களுள் ஒருவரானசௌதாமி பௌத்ஜெமா என்பாரை பிரெஞ்சு இராணுவத்தினர் சுட்டுக் கொன்று விட்டனர் என்று தெரிய வருகிறது.

அவர் இராணுவத்தினரைத் தாண்டி 'மோட்டார் சைக்கிள்' வண்டியில் செல்ல முற்பட்ட போது, அவரை அடையாளம் கண்ட பிரெஞ்சு இராணுவத்தினர் சுட்டுவிட்டார்களாம்.

இவர் பன்முறை, முன்பு பிரெஞ்சு இராணுவ முகாம்களைத் தாக்கியதாகவும், இவரை விசாரிக்காமலேயே இருமுறை இவருக்கு பிரெஞ்சு இராணுவத்தினர் தூக்குத் தண்டனை விதித்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

கோலார் தங்கச் சுரங்கம்

தேசிய மயமாவது தாமதமாகும்?

கோலார் தங்கச் சுரங்கங்களை, மாநில சர்க்காருக்காக இன்றுள்ள பிரிட்டிஷ் 'கம்பெனி'யே இன்னும் 5 அல்லது 7 ஆண்டுக் காலத்திற்கு ஏற்று நடத்துவது குறித்து, மைசூர் சர்க்காருக்கும், அக்கம்பெனி மேனேஜ்மெண்ட்'டாருக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் விரைவில் ஏற்படுமெனத் தெரிய வருகிறது. இரு தரப்புப் பிரதிநிதிகளும் நடத்தின பேச்சு வார்த்தையின் பயனை இம்முடிவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

டில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தையால் 'கம்பெனி'க்கு தரப்பட வேண்டிய நஷ்டஈடு தொகையும் கணிசமாகக் குறைந்துள்ளதென்று அறிவிக்கப்படுகிறது.

நஷ்டஈடு தொகையை வெகுவாக குறைப்பதற்கு இயற்கை வள அமைச்சர் மாளவியாதான் காரணமென்றும் கூறப்படுகிறது.

நன்றியறிவிப்பு

15-4-56-ல் நடைபெற்ற எங்கள் புதல்வி ராணி—கலைச்செழியன் திருமண விழாவிற்குத் தலைமை தாங்கி சிறப்பித்த அண்ணா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய நண்பர்கள், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய கழகங்கள், நண்பர்கள், அன்பளிப்புகளும் வாழ்த்து மடல்களும் வழங்கிய அனைவருக்கும், தியாகராய கல்லூரி கலா மண்டபத்தைத் தந்துதவிய கல்லூரி நிர்வாகிகளுக்கும், உடனிருந்து பேருதவி புரிந்த நண்பர்களுக்கும், திருமண விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்களின் பணிவன்பான—நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என். வி. நடராசன்--புவனேசுவரி

பொதுக்கூட்டம்

19-வது வட்டம் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற சார்பில் சென்னை குயப்பேட்டையில் 21—4—56 மாலை பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

கே. கே. நீலமேகம்

சென்னை, ஏப். 20—

ஏப்ரல் 4-ந்தேதியன்று சொந்த வியாபார அலுவல் காரணமாகக் குண்டூருக்குச் சென்றிருந்த தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள், இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார்; இன்றிரவு அவர் கும்பகோணத்திற்குப் புறப்பட்டுச் செல்லுகிறார்.

1,40,000 தோட்ட தொழிலாளருக்கு ரூ. 50 லட்சத்திற்குமேல் போனஸ்

திரு—கொச்சியில் தகராறு தீர்ந்து உடன்பாடு ஏற்பட்டது

எர்ணாகுளம், ஏப். 20—

திரு-கொச்சி தோட்டத் தொழிலாளர் போனஸ் தகராறு இப்போது தீர்ந்துவிட்டது என்று கூறப்படுகிறது.

சுமார் 1,40,000 தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு மொத்தமாக ரூ. 50 இலட்சத்திற்கு மேல் தோட்ட முதலாளிகள் போனஸ் வழங்குவதென முடிவாகியிருக்கிறதாம்.

தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வராத தோட்டங்களை இந்த உடன்பாடு கட்டுப்படுத்தாது என்றும் கூறப்படுகிறது.

இலங்கை மக்கள் சபைத் தலைவர்

தமிழர் ஒருவர் தேர்வு

கொழும்பு, ஏப். 20—

எச். எஸ். இஸ்மாயில் என்ற தமிழ்பேசும் உறுப்பினர் ஒருவர் இலங்கை மக்கள் சபையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

முன்னைய மக்கள் சபையில் உதவித் தலைவராக இருந்த இவர் இந்தத் தேர்தலின்போது சுயேச்சையாகப் போட்டியிட்டிருக்கிறார்.

சர்க்கார் கட்சியினர் முன்மொழிய, எதிர்க் கட்சியினரால் வழிமொழியப்பட்டு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மந்திரி ஒருவர் சிங்களத்திலும், எதிர்க் கட்சித் தலைவர் சிங்களம், ஆங்கிலம் இரண்டிலும் பாராட்டுரை வழங்கியிருக்கின்றனர்.

கொத்தலாவலையும் பாராட்டிப் பேசினாராம்.

உறுப்பினர்கள் பலரும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்று தங்கள் தங்கள் மொழியில் விசுவாசப்பிரமாணம் மேற்கொண்டிருக்கின்றனர்.

பஸ் போக்குவரத்து தொழில் நடத்த!

மாவட்டக் கழகங்களுக்கு அனுமதி மறுப்பு

மாவட்டக் கழகங்கள் (ஜில்லா போர்டுகள்) பஸ் போக்குவரத்து தொழில் நடத்தக் கூடாதென சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

மாவட்டக் கழகங்களின் சங்கம், மோட்டார் போக்குவரத்து தொழிலை நடத்த ஜில்லா போர்டுகளுக்கு அனுமதி வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுபினர்.

இதைப் பரிசீலித்த சர்க்கார், '1939-ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தில் இம்மாதிரி மாவட்டக் கழகங்களுக்கு, தொழில் நடத்த அனுமதிக்க வேண்டுமென்று விதி இல்லை; மேலும் பொருளாதார ரீதியாக இந்தத் தொழில் இலாபகரமானதாக இருக்க முடியாது என்பதால் ஜில்லா போர்டுகள் இந்தப் போக்குவரத்தினை ஏற்று நடத்தத் தேவையில்லை' என்று அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

தேவபாண்டலம்
22—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஏ. ஆர். சுந்தரம்
பேசுவோர்:
தில்லை-வில்லாளன்
பொன்-சொக்கலிங்கம்

★

காஞ்சீபுரம்
கங்கைகொண்டான் மண்டபம் அருகில்
22—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
வி. சண்முகம்
பேசுவோர்:
அருண்மொழி
பூங்கோதை

★

நிலவெளி:
தி. மு. கழகந் துவக்க விழா
22—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
என். கிட்டப்பா
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
சி. ஐம்பு
கே. எஸ். சௌந்தரராசன்

★

நரசிங்கன்பேட்டை:
தி. மு. கழகந் துவக்க விழா
23—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
கோ. சி. மணி
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். கிட்டப்பா
கொடியேற்றுபவர்:
கே. எஸ். சௌந்தரராசன்

திராவிட மறுமலர்ச்சி மன்ற (அழகிரி நினைவு படிப்பக) ஆண்டு விழா

22—4—56 காலை 10 மணியளவில், மதுரை கீழ மாசி வீதி, திராவிட மறுமலர்ச்சி மன்ற (அழகிரி நினைவுப் படிப்பக) 5-வது ஆண்டு விழா, படிப்பகத்தின் முன்பு நடைபெறும்.

தோழர் ஏ. எம். பால் தலைமை தாங்குவார்.

தோழர் சி. பி. சிற்றரசு கொடியேற்றிவைப்பார்.

தோழர் எஸ். முத்து பாண்டியனுர் படத்தைத் திறந்து வைப்பார்.

தோழர் மு. கருணாநிதி அழகிரி படத்தைத் திறந்து வைப்பார்.

அன்று மாலை 6 மணியளவில், ஜின்னா திடலில், தோழர் மு. மாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, எஸ். முத்து பேசுவர்.

கோவை நகர தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"கோவை நகரக் கிளையில் செயற்குழுவில் காலியாக இருக்கும் 4 இடங்களுக்குத் தேர்தல் 21—4—56 இரவு 9 மணிக்கு, தெப்பக்குளம் வீதியிலுள்ள நகரக் கழக அலுவலகத்தில் நடைபெறும் தேர்தலில் நிற்க விரும்பும் கழக உறுப்பினர்கள், 21-ந் தேதி மாலை 6 மணிக்குள் என்னிடம் கடித மூலம் விண்ணப்பிக்கவேண்டுகிறேன்."

குறிப்பு:—'செயற்குழுவில் பிரதிநிதிகள் இல்லாத வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவேண்டுகிறேன்' என்று, கோவை நகர தி. மு. க. செயலாளர் சே. அ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

பெங்களூர்-இலக்குமணபுரி தி. மு. கழக வளர்ச்சிக்காக

சிறப்புக் கூட்டம்

22—4—56 மாலை 5 மணிக்கு
சர். புட்டண்ணா செட்டி டவுன் ஆலில்
தலைவர்:
எஸ். வி. பதி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
நன்கொடை: ரூ 1. அணா 8.

புதுவை — ஓர்லெயான்பேட்

தி. மு. க. 2-வது ஆண்டு விழா
22—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ச. சிவப்பிரகாசம்
பேசுவோர்:
கி. மனோகரன்
செ. கோவிந்தராசன்
கோ. பாண்டியன்

அன்று காலை 9 மணிக்குக் கழகக் கொடி ஏற்றிச் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும். பகலில் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும்.

சென்னை—27-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு

22—4—56 காலை 10 மணியளவில், சென்னை எடப்பாளையம், எண் 32, அனுமந்தராயன் கோயில் தெருவிலுள்ள துணைச்செயலாளர் ஆ. இராசன் மனையில், வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்களின் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டுப் பிரதிநிதி தேர்வு ஆய்வுக்கு வரும்.

சென்னை—44-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு

21—4—56 இரவு 8-30 மணியளவில், கழகப் பணிமனையில் கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், மாநில மாநாட்டுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தலும், கழக வரவு-செலவு, மற்றும் பல முக்கிய பிரச்சினைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை—47-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

21—4—56 இரவு 8 மணியளவில், சைதாப்பேட்டை கடைத் தெரு, எண் 95 இல்லத்தில் நடைபெறும் பொதுக் குழுவில், உறுப்பினர்கள் அனைவரும் கலந்துக் கொள்ளவேண்டப்படுகிறார்கள்.

பாரதிதாசன் பிறந்ததின விழா

22—4—56 காலை, 9 மணியளவில், சென்னை 42-வது வட்ட கழகப் பணிமனையில் (4, நமசிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி) தோழர் எம். கே. சாமி தலைமையில், பாரதிதாசன் பிறந்த தின விழா நடைபெறும். வரவேற்பாளர்: மு. வரதராசன்; படத் திறப்பாளர்: கே. கண்ணன்; பேசுவோர்: நீலநாராயணன், க. வீரபாண்டியன், க. சே. அன்பரசு மற்றும் பலர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

22—4—56 காலை 9-30 மணியளவில், மனைமரத்தொட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோயில் மண்டபத்தில், திரு. அன்புப் பழகம்நீ தலைமையில், 'நமது இலக்கியங்கள்' என்ற தலைப்பில், திரு. நீலதுரைக் கண்ணனும், 'இன்றையத் தமிழகம்' என்ற தலைப்பில் திரு. காஸிசுபார் துரையரசனும் பேசுவர்.

தஞ்சை கிராம அஞ்சல் (E. D.) ஊழியர் மாகாண மாநாடு

22—4—56 காலை 8 மணியளவில், தஞ்சை யாகப்பா டாக்கீசில் நடைபெறும். திரு. ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் கொடியேற்றுவார். முதலமைச்சர் கே. காமராசர் மாநாட்டைத் திறந்தவைப்பார். திரு. ஆர். வெங்கட்டராமன் எம்.ஏ. தலைமை தாங்குவார். பலர் பேசுவர்.

கோட்டைமேடு மாணவர் நல்லற மன்றம்

மேற்படி மன்றத்தின் சார்பில், தோழியர் பொற்செல்வி-இளமுருகு தலைமையில், தோழர் இளமுருகு-பொற்செல்வி 'நாடும்—நாடகமும்' என்பதுபற்றிப் பேசுவார். பின்னர், அவர்கள் முன்னிலையில், மாணவ மன்றத்தார் நடிக்கும் 'வாழ்வு எது?' என்ற நாடகம் நடைபெறும்.

குறிப்பு:—தேதியும், காலமும் குறிப்பிடப்படவில்லை.

சொற்பயிற்சிக் கூட்டம்

21—4—56 மாலை 6-30 மணியளவில், வட சென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் ஏகாம்பரம் தலைமையில், 'இலக்கியம்' என்னும் பொருள்பற்றி தோழர்கள் ஆர். எல். லிங்கராசன், ப. கோ. வீரராகவன், இரா. பாலு ஆகியோர் பேசுவார்கள்.

* * *

22—4—56 காலை 9 மணியளவில், புலவர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

21—4—56 மாலை 7 மணியளவில், எண் 15, நாகப்ப நாய்க்கன் தெரு, கொருக்குபேட்டை, கழகப் பணிமனையில் தோழர் இரா. செங்குட்டுவன் தலைமையில் 'திராவிடம்' எனும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

திருமணங்கள்

22—4—56 காலை 9 மணியளவில் சென்னை சூளை தி. மு. க. துணைச்செயலாளர் அ.இரத்தினம் (தென்னவன்)—தோழியர் தெய்வயானை திருமணம் தோழியர் சத்தியவாணி-முத்து தலைமையில், சூளை, நரசிங்க பெருமாள் கோயில் தெருவு, 4-ம் எண் இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், இளம்பரிதி வாழ்த்துரை வழங்குவர்.

* * *

22—4—56 காலை 8-30 மணியளவில், சென்னை-அண்ணாமலைபுரத்திற்கு அருகிலுள்ள குருபுரத்தில், 50-வது வட்ட மாவட்டப் பிரதிநிதி தோழர் நி. சமூகன்—தோழியர் சக்குபாய் திருமணம் தோழர் கண்ணதாசன் தலைமையில், நடைபெறும். தோழர்கள் கண்ணபிரான், சைதை சம்பந்தம் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

22—4—56 காலை 8 மணியளவில், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில், தேவபாண்டலம் தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் வி. செவத்தான் — தோழியர் இராசம் திருமணம், தேவபாண்டலத்தில், மணமகன் இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் வி. வரதராசலு, சோம. சங்கரலிங்கம் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

22—4—56 காலை 9 மணியளவில், குடியேற்றம் டவுன், பிச்சனூர் காளியம்மன் கோவில் வீதி, எண். 10 இல்லத்தில், தோழர் ஏ. வி. துரைசாமி (தம்பிதுரை)—தோழியர் இந்திராணி (இராணி) திருமணம் நடைபெறும். தோழியர் அருள்மொழி, தோழியர் பூங்கோதை வாழ்த்துரை வழங்குவர்.

* * *

23—4—56 காலை 9 மணியளவில், காவேரிப்பாக்கத்திற்கு அடுத்த பெறுக்கரும்பூரில், தோழர் எம். எஸ். முத்து தலைமையில், தோழர் சி. மோசை—தோழியர் புஷ்பராணி திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.